isentia
AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 1,13 PRINTED SIZE: 318.00cm² REGION: KL
MARKET: Malaysia PHOTO: Full Color ASR: MYR 1,634.00 ITEM ID: MY0062421579



04 FEB, 2025

# PM denies 14pct electricity tariff hike claim

Tamil Malar, Malaysia



## மின்சாரக் கட்டணம் 14% வரை அதிகரிக்காது



கோலாலம்பூர், பிப். 4 –

வரும் ஜூலை மாதம் முதல் தீபகற்ப மலேசியாவில் மின்சாரக் கட்டணம் 14 விழுக்காடு அதிகரிக்கும் என்று கூறப்படுவதை பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் மறுத்திருக்கின்றார்.

எனினும், மின்சாரக் கட்டணம் நிச்சயம் உயர்த்தப்படும் என்றும் எத்தனை விழுக்காடு என்பது மறுஆய்வு செய்யப்பட்ட பின்னர் நிர்ணயிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

குறிப்பிட்ட காலகட்டத்தில் அதன் ஆற்றல் மற்றும் கட்டண அடிப்படையில், மின்சாரக் கட்டணத்தை அவசியம் அதிகரிக்க வேண்டியிருப்பதாகவும் ஆனால், அது 14 விழுக்காட்டுக்கு நிச்சயம் உயர்த்தப்படாது என்றும் நிதி அமைச்சருமான அன்வார் தெரிவித்தார்.

பக்கம் 13

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.



04 FEB, 2025

# PM denies 14pct electricity tariff hike claim

Tamil Malar, Malaysia



## மின்சாரக் கட்டணம் 14 % வரை

"நாட்டின் கல்வி முறையை மேம்படுத்தவும் ஏழை மக்களுக்கு உதவுவதற்காகவும் அக்கட்டணம் உயர்த்தப்பட வேண்டியுள்ளது. கல்வியை நான் எவ்வாறு மேம்படுத்துவது? ஏழைகளுக்கு நான் எவ்வாறு உதவி செய்வது? சாலைகளை நான் எப்படி தரம் உயர்த்துவது?

"மருத்துவ வசதிகளை நான் எவ்வாறு அதிகரிக்கச் செய்வது? இவையெல்லாம் ஒரு சிறு வரி அதிகரிப்பு மூலமும் செய்ய முடியும்" என்று, நேற்று திங்கள்கிழமை கோலாலம்பூரில் மலேசிய சீன வர்த்தக மற்றும் தொழில்துறை சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த 2025 சீனப் புத்தாண்டு நிகழ்ச்சியில் உரையாற்றும்போது அன்வார் தெரிவித்தார். "ஒரு சிறு அளவிலான அதிகரிப்பு ஏற்றுக் கொள்ளத்தக்கது" என்று கூறிய பிரதமர், இலக்கவியல் உருமாற்றத்திற்கான வளர்ச்சி மிக அவசியம் என்றார். இத்துறையில் புதிய வசதிகள் மற்றும் பயிற்சிகளுக்கு அதிக நிதி தேவைப்படுவதாகவும் இதற்கு அரசாங்கத்திடமிருந்து மட்டுமல்ல தனியார் துறையின் பெரிய அளவிலான முதலீடுகளும் தேவைப்படுவதாகவும் அன்வார் தெரிவித்தார்.

வரும் ஜூலை ஒன்றாம் தேதி முதல், தீபகற்ப மலேசியாவில் மின்சாரக் கட்டணம் 14.2 விழுக்காடு வரை அதிகரிக்கப்பட விருப்பதாக, தெனாகா நேஷனல் நிறுவனம் செய்திருக்கும் அறிவிப்பு குறித்து, இந்நிகழ்ச்சியில் முன்னதாக உரையாற்றிய அச்சங்கத் தலைவர் டத்தோ இங் இ பிங் கவலை தெரிவித்திருந்தார். அத்தகைய அதிகரிப்பு, ஒட்டுமொத்த விநியோகத் துறையையும் பாதிக்கச் செய்யும் என்றும் அதனால் ஏற்படக் கூடிய செலவுத் தொகை பயனீட்டாளர் பணவீக்கத்திற்கு வழிவகுத்துவிடக் கூடும் என்றும் அவர் கூறியிருந்தார். அதனால், நடப்பில் உள்ள மின்சாரக் கட்டணத்தையே 2025-2026ஆம் ஆண்டு முழுமையிலும் அமலில் வைத்திருக்குமாறு அரசாங்கத்தை சங்கம் கேட்டுக் கொள்வதாகவும் அவர் கூறியிருந்தார்.

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.